**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093654

1. District மாவட்டம் : விழுப்புரம் PS: காவல்நிலையம் ஊ.த.க பிரிவு Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 06/2020 Date: நாள் 04.12.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(a) of PC
(ii) Act சட்டம்: 1988 as Amendment Act 2018 Sections பிரிவுகள்: Act as Amendment - 2018
(iii) Act சட்டம்: Indian Penal Code 1860 Sections பிரிவுகள்: 167, 409, 468, 471 & 477(A) IPC r/w 109 IPC
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை ஜனவரி - 2017, மார்ச் - 2017, ஆகஸ்டு - 2017 முதல் டிசம்பர் - 2017 வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை மற்றும் ஜனவரி - 2018 முதல் மார்ச் - 2018 வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.12.2020 Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி, உளுந்தூர் பேட்டை. சுமார் 40 கி.மீ தென் மேற்கு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. சிகோசனார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி ஊ.த.க பிரிவு, பெரம்பலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டவருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

—

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டவர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04.12.2020 at 11.00hrs.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
C.K. யுவராஜ்
Name: பெயர் காவல் துணைக் கண்காணிப்பாளர்,
Rank: நிலை [illegible] No. எண் .......
விழுப்புரம்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| எதிரிகள் | |
| --- | --- |
| 1.திரு.M.ஞானசேகரன் 54/2019<br>த/பெ. முருகேசன்<br>போதககாப்பாளர்<br>(Wardon cum Tutor),<br>அரசு ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி<br>உளுந்தூர்பேட்டை<br>விழுப்புரம் மாவட்டம்<br><br>2. திரு.K.வெங்கடேசன்<br>தனிவட்டாட்சியர் (ஆ.தி.ந)<br>உளுந்தூர்பேட்டை<br>விழுப்புரம் மாவட்டம்<br><br>3. திரு.P.இளவரசன்<br>தனிவட்டாட்சியர் (ஆ.தி.ந)<br>உளுந்தூர்பேட்டை<br>விழுப்புரம் மாவட்டம்<br><br>4. திரு. V.ஆனந்தன்<br>தனிவட்டாட்சியர் (ஆ.தி.ந)<br>உளுந்தூர்பேட்டை,<br>விழுப்புரம் மாவட்டம் | திரு.நா.மணிபாலன் 25/19 s/o நாகராஜ் 226, வடக்கு தெரு (காலனிரோடு), எல்லை கிராமம் மற்றும் அஞ்சல், உளுந்தூர்பேட்டை வட்டம் விழுப்புரம் மாவட்டம் என்பவரின் மனு சம்மந்தமாக சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரக உத்தரவுபடி ஒரு முதல் கட்ட விசாரணை PE.198/2018/ADW/VPM dt 05.07.2018-ன் படி முதல் நிலை விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்விசாரணையில் தெரியவந்த விபரங்கள் பின்வருமாறு<br>விழுப்புரம் மாவட்டம், ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் உளுந்தூர்பேட்டை அரசு ஆதி திராவிடர் நல மாணவர் விடுதியில் 06.09.2014-ந்தேதி முதல் 27.07.2020-ந்தேதி வரை எதிரி 1 திரு.ஞானசேகரன் போதக காப்பாளராகவும், எதிரி 2 திரு.வெங்கடேசன் 01.02.2017 முதல் 17.05.2017 வரையிலும், எதிரி 3 திரு.இளவரசன் 18.05.2017 முதல் 10.04.2018 வரையிலும், எதிரி 4 திரு.ஆனந்தன் 11.04.2018 முதல் 01.08.2018 வரையிலும் விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஆதி திராவிடர் நல தனிவட்டாட்சியராக பணிபுரிந்து வந்துள்ளார்கள். இவர்கள் ஊழல் தடுப்பு சட்டம் - 1988 பிரிவு 2(C)ன் படி பொது ஊழியர்கள் ஆவார்கள். |

மார்ஜினில் குறிப்பிடப்பட்டுள்ள எதிரி 1 விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை அரசு ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி, போதக காப்பாளராக 2014-ஆம் ஆண்டு முதல் 2018-ஆம் ஆண்டு வரை பணிபுரிந்த காலத்தில் விடுதிக்கு தேவையான பால் மற்றும் தயிர் ஆகியவற்றை உளுந்தூர்பேட்டை வட்டம், பாண்டூர் கிராமத்தை சேர்ந்த S.ஷகிலா என்பவரிடம் இருந்து வாங்கியதாகவும், விடுதிக்கு தேவையான விறகை உளுந்தூர்பேட்டை வட்டம், செங்குறிச்சி கிராமத்தை சேர்ந்த K.மணிகண்டன்,

செம்மணங்கூர் கிராமத்தை சேர்ந்த K.மணிகண்டன் மற்றும் S.முருகன் என்பவர்களிடம் இருந்தும் வாங்கியதாக போலியாக முத்திரை ரசீது தயார் செய்து சமர்ப்பித்துள்ளார்.

வி.அஸ்வின்ராஜ் த/பெ வீரவேல் என்ற மாணவர் உளுந்தூர்பேட்டை வட்டம் எலவனாசூர்கோட்டையில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் 04.06.2018ம் தேதி முதல் படித்து வருகிறார். ஆனால் குற்ற அலுவலர் ஞானசேகரன் மேற்படி மாணவர் உளுந்தூர்பேட்டை அரசு மாணவர் விடுதியில் தங்கி உளுந்தூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் படித்து வருவதாக விடுதியின் மாணவர் சேர்க்கை பதிவேடு மற்றும் வருகை பதிவேடுகளில் போலியாக பதிவு செய்து மேற்படி மாணவர் விடுதியில் தங்கி படித்ததாக பொய்யாக கணக்கு எழுதி அவருக்கான உணவு கட்டணம் பெற்று அரசுக்கு இழப்பு ஏற்படுத்தி உள்ளார்.

கடந்த ஜனவரி 2017, மார்ச் 2017, ஆகஸ்டு 2017 முதல் டிசம்பர் 2017 வரை மற்றும் ஜனவரி 2018 முதல் மார்ச் 2018 வரையிலான காலத்தில் விடுதிக்கு தேவையான மளிகை பொருட்களை விழுப்புரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் கடனாக பெற்று அதற்குண்டான தொகை ரூ.89,392.75/-யை மேற்படி பண்டகசாலைக்கு கடந்த 06.04.2018 காசோலையாக தனி வட்டாட்சியர் (ஆதி திராவிடர் நலம்), உளுந்தூர்பேட்டை அவர்கள் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி காலத்தில் குற்ற அலுவலர் திரு.ஞானசேகரன் விடுதிக்கு தேவையான பொருட்களை உளுந்தூர்பேட்டை R.M.ஸ்டோரில் பணம் கொடுத்து பெற்றதாக போலியான பில்களை இணைத்து உணவு கட்டண பட்டியல் தயார் செய்து சமர்ப்பித்து அரசிடமிருந்து விடுதி மாணவர்களுக்கான உணவு கட்டணத்தை பெற்று கையாடல் செய்துள்ளார்.

மேலும் 26.03.2018ம் தேதி காலை 11.30 மணிக்கு திருக்கோவிலூர் சார்-ஆட்சியர் செல்வி.சாருஸ்ரீ அவர்கள் மேற்படி விடுதியை ஆய்வு செய்து ஆய்வின் போது விடுதியில் 4 மாணவர்கள் மட்டுமே இருந்ததாகவும் ஆனால் பதிவேட்டில் 156 மாணவர்கள் வருகை என காட்டப்பட்டு இருப்பது அடிப்படை உண்மை முரணாக இருப்பதாகவும் வருகை பதிவேட்டில் பொய்யாக எண்களை அதிகப்படுத்தி காட்டக்கூடாது என்றும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி காண்பித்து அரசு பணத்தை வீணடிக்கக்கூடாது என்றும் பார்வையாளர் பதிவேட்டில் பதிவு செய்து மேற்படி ஆய்வு குறித்து விழுப்புரம் ஆட்சியர் அவர்களுக்கு அறிக்கை அனுப்பியதன் அடிப்படையில் விழுப்புரம் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரால் குற்ற அலுவலர் 1 திரு.ஞானசேகரனுக்கு குற்ற குறிப்பாணை சார்வு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. மேலும் கு.அ1 திரு.ஞானசேகரன் 16.07.2018ம் தேதி 24.03.2018 முதல் 31.03.2018 வரை உள்ள நாட்களுக்கு பொய்யான கணக்கு எழுதி அதிகப்படியாக பெறப்பட்ட உணவு கட்டணம் ரூ.32,052/-த்தை குற்ற அலுவலர் திரு.ஞானசேகரன் அரசுக்கு திரும்ப செலுத்தியுள்ளார்.

மேற்படி வகையில் குற்ற அலுவலர் பணிபுரிந்த காலத்தில் உளுந்தூர்பேட்டை ஆதி திராவிடர் நல மாணவர் விடுதியில் சுமார் 40 மாணவர்களே தங்கியிருந்த நிலையில் மாணவர் சேர்க்கை பதிவேடு மற்றும் வருகை பதிவேடுகளில் விடுதியில் தங்காத மாணவர்களின் பெயர்களை நேர்மையற்ற முறையில் போலியாக சேர்த்து 167 மாணவர்கள் விடுதியில் தங்கி இருந்ததாக மாணவர்களின் எண்ணிக்கையை

அதிகப்படுத்தி பொய்கணக்கு எழுதி அரசை ஏமாற்றும் நோக்கில் 167 மாணவர்களுக்கு செலவினப்பட்டியல் தயார் செய்து ஆதாயம் பெறும் நோக்கோடு ரூ.11,92,971/- அளவிற்கு அரசுக்கு இழப்பு ஏற்படுத்தி கையாடல் செய்துள்ளார்.

மேலும் மேற்படி கையாடலுக்கு குற்ற அலுவலர்கள் 2 முதல் 4 வரை உள்ள நபர்கள் ஆதாயம் பெறும் நோக்கத்தில் எதிரி 1 திரு.ஞானசேகரன் தயாரித்த பொய்யான உணவு-கட்டண செலவினப்பட்டியல் சரிவர ஆராயாமலும் மேற்படி விடுதியினை ஒழுங்கான முறையில் கள ஆய்வு மேற்கொள்ளாமலும், எதிரி 1 திரு.ஞானசேகரன் ரூ.11,92,971/- அளவிற்கு அரசு பணத்தை கையாடல் செய்வதற்கு உடந்தையாக இருந்து அரசுக்கு இழப்பை ஏற்படுத்தி உள்ளனர்.

ஆகையால் மேற்சொன்ன எதிரி1 திரு.ஞானசேகரன் மீது சட்டப்பிரிவுகள் 167, 409, 468, 471 & 477(A) இந்திய தண்டனை சட்டம்-1860, 13(2) உடன் இணைந்த 13(1)(a) ஊழல் தடுப்பு சட்டம் - 1988 (திருத்தம் 2018)-ன் படியும் எதிரிகள் 2 முதல் 4 வரை உள்ள நபர்கள் மீது சட்டப்பிரிவுகள் 167, 409, 468, 471 & 477(A) இந்திய தண்டனை சட்டம்-1860, 13(2) உடன் இணைந்த 13(1)(a) ஊழல் தடுப்பு சட்டம் - 1988 (திருத்தம் 2018) உடன் இணைந்த 109 இ.த.ச ன்படியும் சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரக உத்தரவுபடி ஒரு முதல் நிலை விசாரணை எண் PE.198/2018/ADW/VPM dt: 24.11.2020-ன் படி இன்று 04.12.2020 தேதி 10.30 மணிக்கு என்னால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, இவ்வழக்கின் கோப்பை புலன் விசாரணை மேற்கொள்ள திரு.R.ஜேசுதாஸ், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம் அவர்களிடம் ஊ.த.க துறை உத்தரவுப்படி ஒப்படைக்கப்பட்டுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல், மற்றும் சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரக உத்தரவு நகல் அத்தாட்சி செய்யப்பட்டது. சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு தடுப்பு சட்ட வழக்குகள் விழுப்புரம் அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கின் கோப்பில் வைக்கப்பட்டது.

(K.யுவராஜ்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்